இணைப்பு I.

[159-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 113-க்கான விடையைக் காண்க].

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1976 செப்டம்பரில் நடைபெற்ற மாநில அரசுகளின் பாசன அமைச்சர்களுடைய இரண்டாவது மாநாட்டில் செய்த பரிந்துரையை ஒட்டி, இம்மாநிலத்தில் (பெரியாறு-வைகை பாசன ஏற்பாட்டை புதுமைப்படுத்துவது நீங்கலாக) பெரிய, நடுத்தர பாசன திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க இம்மாநிலத்தின் பாசனத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் (பாசன), முதுநிலை துணைத் தலைமைப் பொறியாளரை மாநிலக் கண்காணிப்பு அதிகாரியாகக் கொண்டு, உதவிப் பொறியாளர் ஒருவர் இளநிலைப் பொறியாளர் இருவர் ஆகியோரைக் கொண்டு, அரசினர் பாசனக் கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. பெரியாறு-வைகை பாசனப் புதுமைத் திட்டத்தைப் பொறுத்தமட்டில், பாசனப் பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காக நிர்வாகப் பொறியாளர் ஒருவரையும், உதவிப் பொறியாளர் ஒருவரையும் துணைப் பணியாளர்களையும் கொண்டதொரு கோட்டம் அமைப்பதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் தனித் தலைமைப் பொறியாளரின் கீழ் இக்குழு செயல்படுகிறது.

2. இதனைத் தொடர்ந்து 1977 ஜூலையில், இந்திய அரசு வேளாண்மை-பாசன அமைச்சகம், ரூ. 30 கோடிக்கு மேற்பட்ட செலவு மதிப்புடைய ஒவ்வொரு பெரிய பாசனத் திட்டத்திற்காகவும், மேற்பார்வைப் பொறியாளர் துணைச் செயலாளர், உதவிப் பொறியாளர் ஒருவர் ஆகியோரைக் கொண்டும், ரூ. 30 கோடிக்குக் குறைந்த மதிப்புடைய இரு பெரிய பாசனத்திட்டங்கள் ஒவ்வொன்றுக்காகவும் உதவிப் பொறியாளர் ஒருவரைக் கொண்டும், பாசனத் திட்டப்பகுதி, நிலையில் அய்ந்து முதல் ஆறு நடுத்தரப் பாசனத் திட்டங்கள் ஒவ்வொன்றுக்காகவும், உதவி பொறியாளர் ஒருவரையும். வட்ட அளவில் (ஒவ்வொரு வட்டத்துக்கும் உதவி பொறியாளர் ஒருவர்) நிர்வாகப் பொறியாளர் ஒருவரையும், உதவிப் பொறியாளர் ஒருவரையும் மாநில நிலையில் கொண்டு கண்காணிப்புக்குழு அமைக்கப்படலாமென்று கருத்து தெரிவித்தது.

1980 பிப்ரவரி 11]

3. இம் மாநிலத்தில் பாசன வளம் தற்போது மேம்பாடு அடைந்து வரும் கட்டத்தைக் கருதிப்பார்த்து இந்திய அரசுக்கு இவ்வரசு இது குறித்து எடுத்துள்ள ஏற்பாடுகள் போதுமானவை என்று தெரிவிக்கப்பட்டது.

4. சிறுபாசனத் திட்டங்களை ஒருங்கிணைக்கவும், கண் காணிக்கவும் மறு ஆய்வு செய்யவும் ஒருங்கிணைப்புப் பணியின் முன்னேற்றத்தைத் தொகுத்து அறிக்கை தரவும், மாநில நிலையில் ஒருங்கிணைப்புக்குழு ஒன்றை அமைக்கலா மென்று, 1978 மார்ச் மாதத்தில் இந்திய அரசு கருத்து தெரி வித்தது.

இதற்கிணங்க, தலைமைச் செயலாளரைத் தலைவ ராகவும் பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை, கூட்டுறவு துறைச் செயலாளர்கள், தலைமைப்பொறியாளர் (பாசனம்) தலைமைப் பொறியாளர் (நிலநீர்) தமிழ்நாடு மின்சார வாரியத் தின் தலைமைப் பொறியாளர் (பங்கிடு) தமிழ்நாட்டில் உள்ள இந்திய வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இவை ஒவ்வொன்றி லிருந்தும் ஒரு பிரதிநிதி, வேளாண்மைத்துறை இயக்குநர். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாகவும் கொண்டு (a) மேற்பரப்புப் பாசனம், (b) நிலநீர்ப்பயன் ஆகியவை குறித்து சிறுபாசனத் திட்டங் களைக் கண்காணித்து மறு ஆய்வு செய்வதற்காக மாநில நிலையில் ஒருங்கிணைப்புக் குழுவை இவ்வரசு அமைத்தது.

இணைப்பு II.

[160ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 114 க்கான விடையைக் காண்க].

விவர அறிக்கை.

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் செடிப்பண்ணைகள் உள்ளன :—

வரிசை எண்.	செடிப்பண்ணை உள்ள இடம்.	மாவட்டம்.
	(1)	(2)
1	அரசு பழப்பண்ணை, ஆத்தூர் ..	செங்கற்பட்டு.
2	முந்திரி நாற்று மற்றும் பழத்தோட்டம்	பிச்சிவாக்கம், செங்கல்பட்டு.
3	அரசு பழப்பண்ணை, குற்றாலம்	திருநெல்வேலி.
4	அரசு பழப்பண்ணை, வாணி —	இராமநாதபுரம்